பட்டுச் சேலைகளின் சோலையாகத் திகழும் ஒரே இடம்!
**இளவரசி**
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம்.
[சி-9729]

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண, முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான இடம்
**இளவரசி**
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம்.
[சி-9729]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 25 திங்கட்கிழமை (09 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 44

# வடக்கு-கிழக்கில் பூரண அமைதி
# அசம்பாவிதம் எதுவும் இல்லை

## போர் இடைநிறுத்தத்துக்கு தெற்கில் பல தரப்பிலிருந்தும் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 9

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் இடையில் சனிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்த போர் இடை நிறுத்தம் எந்த வித அசம்பாவிதமும் இன்றிக் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. வடக்கு – கிழக்கில் பூரண அமைதி நிலவுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

ஒப்பந்தம் மீறப்பட்டதாக எப்பகுதியில் இருந்தும் அறிவிக்கப்பட வில்லை என்று இராணுவ அதிகாரிகளும், அரசாங்க அதிகாரிகளும் தெரிவித்தனர்.

போர் இடைநிறுத்தம் தவறுதலாக மீறப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த ஸ்ரீலங்கா இராணுவமும், புலிகளும் வானொலி தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர் என்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

போர் இடைநிறுத்தத்துக்கு தெற்கில் பல தரப்பினரிடமிருந்தும்வரவேற்புக்கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

[3ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் 'ஹொட்-லைன்' தொடர்பு?

கொழும்பு, ஜன. 9

போர் இடை நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்திருப்பதை அடுத்து—

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்கும் இடையில் ''ஹொட்லைன்' நேரடித் தொலைத் தொடர்பு விரைவில் ஏற்படுத்தப்பட விருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ)

முச்சந்திமுரளி



அப்ப போர் நிறுத்தத்துக்கு முன் தங்களின்ர கைவரிசையைக் காட்டியிருக்கினம் போல......

## புலிகள் – படையினர் 'வயர்லெஸ்' தொடர்பு!

கொழும்பு, ஜன. 9

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளும், இராணுவ அதிகாரிகளும் நேற்று தம்மிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர் என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

அந்தந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பான விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கும், இராணுவ தளபதிகளுக்கும் இடையே ''வயர்லெஸ்'' மூலமாக தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அறிய வந்தது. (ஐ-3)

ஆனையிறவு - பூநகரி

## இரு பாதைகளையுமே திறப்பதில் அரசு அக்கறை

### அடுத்த பேச்சில் ஆராயப்படுமாம்

கொழும்பு, ஜன. 9

விடுதலைப் புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையே இம்மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள 3 ஆம் கட்ட பேச்சுவார்த்தையின் போது ஆனையிறவு மற்றும் பூநகரி பாதைகளை போக்குவரத்துக்காகத் திறப்பது குறித்தே முக்கியமாக ஆராயப்படும் என்றும்—

இவ்விரு பாதைகளும் விரைவில் திறக்கப்பட வேண்டும் என்பதை அரச பிரதிநிதிகள் வலியுறுத்துவர் எனவும் பி. பி. ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டைப் புனரமைப்பதற்கான வேலைகளை மேற்கொள்ளுவதற்குத் தேவையான கனரக வாகனங்களின் போக்குவரத்துக்காக ஆனையிறவுப் பாதையும் —

(3ஆம் பக்கம் பார்க்க)

## புதிய யுகம் ஒன்றின் உதயம் என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா

லண்டன், ஜன. 9

ஸ்ரீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் 11 ஆண்டு காலச் சண்டைக்குப் பின்னர் இரண்டு வார மோதல் நிறுத்த உடன் படிக்கை ஒன்றைச் செய்துள்ளனர்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த உடன்படிக்கை ''புதிய யுகம் ஒன்றின் உதயத்தைக்'' குறிக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

இப்படி பி.பி. ஸி நேற்றுத் தெரிவித்தது.

தமிழர் பெருபான்மையாக வாழும் வடக்கிலும் கிழக்கிலும் அதிகாரத்தைப் பங்கிடுவது பற்றிய யோசனைகள் சமாதானப் பேச்சு வார்த்தையின் போது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு முன்வைக்கப்படும் என்று அவர் கூறினார் என்றும் பி. பி. ஸி தெரிவித்தது, (க)

## கண்காணிப்புக் குழுவினர் இன்று யாழ். வருகின்றனர்!

யாழ்ப்பாணம், ஜன. 9

சனிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் இடையில் போர் இடை நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கான வெளிநாட்டு பிரதிநிதிகளும் அரச தரப்புப் பிரதிநிதிகளும் அடங்கிய குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகிறது.

இக்குழுவினர் விமானம் மூலம் பலாலி வந்து காங்கேசன்துறை மார்க்கமாக கப்பலில் பருத்தித்துறைக்கு வருவர்.

இக்குழுவினரின்வருகை பற்றி கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளார் என யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் தெரிவித்தார்.

இவர்களுக்கான தங்குமிட,

[4ஆம் பக்கம் பார்க்க]

## செயலகத்தில் இந்த வாரம் முதல் வானொலி தொலைபேசி இயங்கும்

### தொழில் நுட்பக் குழு யாழ் வந்தது

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ். செயலகத்துக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான வானொலித் தொடர்புத் தொலைபேசி இவ்வாரம் முதல் செயற்படவுள்ளது.

இந்த வானொலித் தொடர்புத் தொலைபேசிமூலம் யாழ். செயலகத்தில் இருந்து பலாலி படைமுகாம் ஊடாக கொழும்புக்கும் ஏனைய இடங்களுக்கும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

யாழ். செயலகத்தில் இந்தத் தொலைபேசியைப் பொருத்துவதற்காக தொலைத்தொடர்புத் திணைக்களத்தைச் சேர்ந்த மூவர் கொண்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் குழு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

விமான மூலம் பலாலிக்கு வந்த அவர்கள் அங்கு இணைப்பு வேலைகளை முடித்துக்கொண்டு 'ஹபரண' கப்பலில் பருத்தித்துறைக்கு வந்தனர்.

யாழ்ப்பாணம் செயலகத்தில் தொலைபேசி இணைப்புகளைப் பொருத்தும் வேலைகளை அவர்கள் இன்று ஆரம்பிப்பர் எனத் தெரிவிக்கப் பட்டது. [ஐ-3-173]

## வடபகுதிக்கான மின்சார விநியோகத் திட்டம் பூர்த்தி

### பிரதி அமைச்சர் தெரிவிப்பு

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மின் விநியோகத்தை நீடிப்பதற்கான திட்டங்களை இலங்கை மின்சார சபை பூர்த்தி செய்துள்ளதென்று மின்சக்தி, எரிசக்தி பிரதி அமைச்சர் திரு. நிமலசிறி ஜயசிங்க கூறினார்.

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் பாதுகாப்புக்கு உறுதி அளிக்கப்படின் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மின் விநியோகத்தை நீடிப்பதற்கான வேலைகளை மேற்கொள்ள இலங்கை மின்சார சபை தயாராக இருக்கிறது என்றும் பிரதி அமைச்சர் கூறினார். (க)

குருநகர் கடற் பகுதியில் நேற்று

## மீனவரை நெருங்கி வந்து மீன் வாங்கிய படையினர்!

யாழ்ப்பாணம், ஜன. 9

விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே போர் இடைநிறுத்தம் அமுலுக்குவந்ததை அடுத்து குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் நேற்று அமைதி நிலவியது.

வழமையாக அடிக்கடி ஒலிக்கும் வேட்டுச் சத்தங்கள் நேற்று கேட்கவில்லை.

மீனவர்கள் கரையில் இருந்து கணிசமான தூரம் கடலில் சென்று தொழிலில் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை குருநகர் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை கடற்படையினர் தம்மை நெருங்கி வந்தனர் என்றும்—

ஆனால் வழமைபோல் அவர்கள் தாக்குதல் நடத்தவில்லை என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

மீனவர்களை நெருங்கி வந்த கடற்படையினர் அவர்களுடன் உரையாடிய பின் அவர்களிடமிருந்து மீன்களை வாங்கிச் சென்றனர் என்றும் தெரியவந்தது. (ஐ-3)

## போர் நிறுத்தம் மட்டும் தீர்வாகாது என்கிறார் ஹரி

இலங்கையின் இனப் பிரச்சினையில் போர் நிறுத்தம் மட்டுமே தீர்வாகாது என்றும்—

உடனடியான அரசியல் தீர்வே புலிகளை போர் நிறுத்த மீறலில் ஈடுபடாமல் இருக்கச் செய்யும் என்றும்— முன்னாள் விமானப்படை தளபதி ஹரி குணத்திலகா கருத்து வெளியிட்டுள்ளார். (இ-3)

## வவுனியாவிலிருந்து பூநகரிஊடாக யாழ்ப்பாணத்துக்குப் பொருள்கள்

### லொறி உரிமையாளர்கள் கேள்விப்பத்திரம்

யாழ்ப்பாணம், ஜன. 9

வவுனியாவில் இருந்து பூநகரிப் பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கு பொருள்கள் ஏற்றிவருவதற்கு 17 லொறி உரிமையாளர்கள் முன் வந்துள்ளனர் என்று தெரிய வந்தது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கான உணவுப் பொருள்களை பூநகரிப் பாதையூடாக வாகன அணி மூலம் அனுப்ப புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சு முடிவு செய்து லொறி உரிமையாளர்களிடம் கேள்விப் பத்திரங்களை கோரியிருந்தது.

17 லொறி உரிமையாளர்கள் தமது கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்துள்ளதாகவும்—

இதுபற்றிய முடிவு பிற்போடப்பட்டுள்ளதாகவும்— கடந்த வாரம் கேள்விப் பத்திரங்களை திறந்த புனர் வாழ்வு,புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-3)

## சந்தைகளில் மீன் விலை நேற்று கணிசமாக வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், ஜன. 9

குடாநாட்டு சந்தைகளில் மீனின் விலை நேற்று கணிசமான அளவு வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்ததை அடுத்து கரையோரப் பகுதிகளில் மீன்பிடித் தொழில் சுறுசுறுப்படைந்தது.

மீனவர்கள் கடலில் நீண்டதூரம் சென்று தொழிலில் ஈடுபட்டனர். இதனால் பெருமளவு கடல் உணவுவகைகள் நேற்று சந்தைக்கு வந்தன. (ஐ-3)

## போர் நிறுத்தத்துக்கு முன் படையினர் தாக்குதல்!

### இன்பருட்டியில் படகு சேதம்

பருத்தித்துறை இன்பருட்டி கடற்பகுதியில் கடந்த சனி இரவு 8 மணியளவில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் மீனவரின் படகு ஒன்று சேதமடைந்தது. மீனவர்கள் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தனர்,

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வருவதற்கு நான்கு மணித்தியாலங்களுக்கு முன் இத் தாக்குல் நடத்தப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து படகில் வந்த கடற்படையினர் தமது படகை நெருங்கி வந்து சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று உயிர் தப்பிய மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-173)

## வடபகுதிஅரச அதிபர்களின் போலி "றபர் ஸ்ராம்ப்"

### கொழும்பில் மோசடி அம்பலம்

யாழ்ப்பாணம், ஜன. 9

வடக்கில் உள்ள அரச அதிபர்களின் போலி ''றபர் ஸ்ராம்ப்'' புகளைப்பயன்படுத்தி வடக்குக்கு பொருள்கள் எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக் குழுவிடம் அனுமதி பெற்ற மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் உள்ள அரச அதிபர்களின் பதவிநிலை ''றபர் ஸ்ராம்ப்'' புகளை போலியாக செய்து, அவர்களின் கையொப்பத்தை இட்டு வடக்குக்கு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் உணவுப் பொருள்களை எடுத்துவர கொழும்பில் சிலர் மோசடிகளில் ஈடுபட்டதாகவும்—

அந்த மோசடிகள் அம்பலமானதை அடுத்து பாதுகாப்பு இணைப்புக் குழு தற்சமயம் அனுமதிப்பத்திரங்களை நுணுக்கமாக ஆராய்வதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹபரணவில் மா வந்தது!

வடமராட்சி, ஜன. 9

திருகோணமலையிலிருந்து ஒருதொகுதி மாவுடன் ஹபரண கப்பல் நேற்று முற்பகல் 10 மணியளவில் பருத்தித் துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

கப்பலிலிருந்து மா இறக்கும் பணி உடன் [illegible] டது. (ஐ-173)

## பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட சம்பவத்தில் இரு படையினர் அடையாளம் காணப்பட்டனர்

கொழும்பு, ஜன. 9

மட்டக்களப்பு மாவட்டம் தம்பனா வெளியில் உள்ள பூமான் சோலை, காயான் காடு ஆகிய பகுதிகளில் புத் [illegible] இளம் பெண்கள் படையினரால் [illegible] பட்ட சம்பவம் தொடர்பாக படையினர் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அடையாள அணிவகுப்பின போது இவர்கள் இருவரும் அடையாளம் காணப் [illegible] பதாகவும் —

இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — பாதுகாப்பு இணைப்பதிகாரி உறுதி அளித்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட எம். பி. கி. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பிரதிநிதி மற்றும் பிரிகேடியர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணி வகுப்பில் மானபங்கப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பெண்களில் இருவர் இருபடையினரை அடையாளம் காட்டியதாகவும் —

அந்த அடையாள அணி வகுப்பின் போது தாமும் சமுகம் அளித்திருந்ததாக

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் வில்லியஸ் வாட்டர்பம் என்ஜின் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S. திரு. 145, பாண்டியந் தாழ்வு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (34590)

கடை பாவனைக்குரிய இரு சோக்கேஸ்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 177, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-271)

அலுமினிய கூரைத் தகரங்கள், கூரை மரங்கள், நிலைகளுடன் கதவுகள், நிலைகளுடன் யன்னல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: B. J. நவரத்தினம், மட்டுவில் தெற்கு, உப தபால் கந்தோர் முன் கடை, சாவகச்சேரி. (34597)

மிற்றா ரகபோட்டோசெட் மெஷின் [Mitta Photo Copier] சிறு பழுதுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. வாசன், இல 13/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (34595)

### கோழிக்குஞ்சு விநியோகம்

கறுப்பு வரி சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர் கொடுத்தவர்களும் உடன் பெற்றுக்கொள்ளவும். மல்வம் வீதியூடாக சிங்கம் வீதி, உடுவில். (7853)

### கலண்டர்கள்

சகல விடுமுறை நாட்களும் [தமிழீழம் உட்பட] அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் சிலிப் வகைகள் தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம், பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (34367)

### வெளிவந்துவிட்டன!

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் புதிய பாடத் திட்டத்திற்கமைய உருவாக்கப் பெற்ற பாலர் கணிதம், சிறுவர் கணிதம், சுற்றாடற் கல்வி, தமிழ் செயல் நூல்கள் வெளிவந்துவிட்டன. ஆக்கம்: இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம். விற்பனையாளர் பூபாலசிங்கம் பொத்தகக் களஞ்சியம், யாழ்ப்பாணம். (34587)

### புலமைப் பரிசில் - 95

யாழ் Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். [8187]

### தவறிவிட்டது

யாழ்ப்பாணத்தில் K K S. வீதியில் உள்ள சைக்கிள் பாக்கிற்கும் மகளிர் கோட்டம் கடைக்கும் இடையில் கோல்ட் கலர் சிற்றிசன் லேடீஸ் மணிக்கூடு ஒன்று தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் திருகோணமலை தொடர்பகம், கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். [8188]

### சங்கீதம் வினா-விடை

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் தரம் 2, 3 பரீட்சைகளுக்கு தோற்றுவோருக்கும் ஆண்டு 6—11 வரை சங்கீதம் கற்போருக்கும் பயன் தரும் சங்கீதம் வினா-விடை நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: செல்வி ''அநேகா'' விற்பனை: ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், பூபாலசிங்கம் பொத்தகக் களஞ்சியம், யாழ்ப்பாணம். (34586)

### G. A. Q. — B. A.

தமிழ் இலக்கணம் வினா-விடை, பத்மாவதி சரிதம்- அ. மாதவ ஐயர், சிலப்பதிகாரம் - கானல்வரி தடலாடு காதை. பாடலும்விளக்கவுரையும் புறநானூறு 1 முதல் 20 வரை. அகநானூறு, கண்ணப்பநாயனார் புராணம் வெளியீடு; உயர் கல்வி நிறுவனம். விற்பனையாகிறது: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-87]

### மணமகள் தேவை

வயது 46, வெளிநாட்டில் வேலை வாய்ப்புள்ள, சிறிதளவு ஆஸ்மா பாதிப்புள்ள, ஆரோக்கியமான, தாரமிழந்த குகவம்சத்தவருக்கு நற்குணமுள்ள, அழகிய, படித்த, பொருத்தமான மணமகள் தேவை. தாரமிழந்தோரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகொள்ளவும். கனகரத்தினம், 17ஆம் கட்டையடி, மூளாய்ப்பிள்ளையார் கோயிலடி, மூளாய். [34545]

### ஆண்டு - 5

Brightஇன் மாணவர்களுக்கான கணிதம், தமிழ் முன்னோடிப் பயிற்சிகள் 80/-. இருபது மாதிரி வினாத்தாள்கள் [விடைகளுடன்] 80/-. பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். [34563]




(சி/261)

## MATHS CENTRE
NELLIADY

94இல் பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரியது.

**DAY CLASS**

**PHYSICS**
8-00 — 9-15 a. m.

**CHEMISTRY**
9-15 — 10-30 a. m.

ஆரம்பம்:
**10 - 01 - 95**

(8184)

---

வட இலங்கை
தொழில் நுட்பக் கல்லூரியின்

## மனையியல் வகுப்புக்கள்

ஆரம்பம்: **14 - 01 - 1995**

✶ கேக் ஐசிங் ✶ தையல்
✶ பூவேலைகள் ✶ தலையலங்காரம்

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETER'S LANE JAFFNA.

[சி-129]

---

வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

## கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம்: **14 - 01 - 1995**

**Introduction to Computer and BASIC Language**

- ★ O/L, A/L மாணவர்களுக்கென விசேடமாக ஆரம்பிக்கப்படுகின்ற பயிற்சி நெறி.
- ★ கூடிய செய்முறைப் பயிற்சியும், தவணை முறைக் கட்டண வசதியும்
- ★ திறமையான மாணவர்களுக்கு விசேட மேலதிக பயிற்சிக் காலம்.
- ★ வார நாள், வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

தொடர்பு கொள்க:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETER'S LANE JAFFNA

[சி-128]

---

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில்
மார்கழி மாத

## ★ 6-ம் திருவிழா விஞ்ஞாபனம் ★

வீதிகள் ஏழுதரும் விஷ்ணு தலம் அழகொளிரும்
நம்மாயோனை மடிமீது சுமந்து வரும்
நல்ல மாநிலம் பொன்னாலை மண்ணென்று புகழ்பாடும்
பூங்காற்று வீதியெங்கும் தவழ்ந்து வரும்
அருந்தவம் செய்திடும் ஆஞ்சநேயர் திருவடிவம்
நித்த மந்த வாசலிலே நிலைத்திருக்கும்
இது பக்தியும் முக்தியும் படியேறக் கிடைத்திடும்
கண்ணாளன் கண்ணனின் பொன்னாலைக் கோயில்

(34506) ஆக்கியோன்: மூளாயூர் ஆசுகவி, சிவசுப்பிரமணியம்.

---

**SINE INSTITUTE**

## சைன் மனையியல் கல்வியகம்

(வீரமாகாளி அம்மன் ஆலய அருகில்)
370, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

மனைப் பொருளியல் டிப்ளோமா பயிற்சி வகுப்புகள்

- ★ நவீன முறையிலான சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம்
- ★ சமையற் கலை மேலைநாட்டு, கீழ்நாட்டு சமையல் முறை
- ★ நவீன முறையிலான கைப்பணி
- ★ பூ வேலை Stockinet Pan Clay Dip-in Silkribon
- ★ தையல் - மெஷின் பூ வேலைகளுடன்
- ★ Cake Icing, Sugar Craft நவீன முறையிலான Wedding Cake

ஆறு மாத பயிற்சியின் பின் Home Economics and Fine Arts சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பம் **20 — 01 — 1995** வரை காலை **9** முதல் **12** வரை காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பிரவேசம் மட்டுப்படுத்தப்பட்டது.

[34591] — நிர்வாகி.

---

## TACEP - ஆங்கில கற்கை நெறி

(பொது நிர்வாக அமைச்சின் அங்கீகாரம் உடையது)

ஆசிரியர், எழுதுவினைஞர், பாடசாலையிலிருந்து விலகியோருக்கான மேற்படி ஆங்கில வகுப்புக்கள் பின்வரும் நிலையங்களில் ஆரம்பமாக உள்ளன.

1. பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி.
2. வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை

- ★ இக்கற்கைநெறி 6 மாத காலம் சனி, ஞாயிறு நாட்களில் (பி. ப. 2 — 5-30) நடைபெறும்.
- ★ கட்டணம் மணிக்கு 5 ரூபா. முழுக்கட்டணமும் 2 தவணைகளில் செலுத்தப்பட வேண்டும்.
- ★ இந்நெறிக்கான தகுதிகாண் தேர்வு 16 - 01 - 95 பி. ப. 2மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறும். (தேர்வுக் கட்டணம்: 30/-)

குறிப்பு:
ஏலவே TACEP சாதாரண தரம் சித்தியடைந்தோருக்கு Intermediate தரத்திலும், Intermediate தரம் தேறியவர்களுக்கு Advanced தரத்திலும் வகுப்புக்கள் 21-01-95 இல் ஆரம்பமாகும்.

- ★ பெயர், முகவரி, சேர விரும்பும் வகுப்பு முதலிய விவரங்களைத் தபால் மூலமோ, நேரிலோ பதிவு செய்க.

சோ. பத்மநாதன்,
மாநில இணைப்பாளர்.

பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி, (34603)

---

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இமெல்டா பீற்றர்சன்
(ஆங்கில ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்)

எமது மதிப்பிற்குரிய ஆசிரியையின் மறைவைக் குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
(34584) யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.

---

## 90-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 01 — 10 — 1953
உதிர்வு: 11 — 10 — 1994

திருமதி
### இராமநாதன் கமலாதேவி

தேடுகின்றோம் உம் முகத்தை
வாடுகிறோம் உம் பிரிவால்
அல்லும் பகலும் உன் நினைவால்
ஆறாத்துயரில் வேகின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்;
— குடும்பத்தினர்.

கோண்டாவில் இடக்கு, கோண்டாவில். (7857)

---

## சான்றிதழ் தவறிவிட்டது

செல்வி இளமதி நடராசா என்பவருடைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான மாணிச் சான்றிதழும், அதன் புகைப்படப் பிரதிகளும் நேற்று மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆ. நடராசா, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி என்னும் விலாசத்தில் தயவுசெய்து தொடர்கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (34617)

---

## அந்தியேட்டி அழைப்பு

அமரர் கொட்டடி
### கே. வி. தெய்வேந்திரம்
(முன்னாள் யாழ். மாநகரசபை உதவி மேயர்)

13-12-94 இல் இறைபதம் அடைந்த அமரரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (10-01-95) செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் வில்லூன்றித் தீர்த்த மண்டபத்தில் நடைபெறும். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

கொட்டடி கே.வி. ஜெயலிங்கநாதன்.
(பெறாமகன்)

12 - 01 - 95 வியாழக்கிழமை அன்னாரது கோண்டாவில் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

க. இராசலிங்கம் சகோதரர்கள்
(மைத்துனர்கள்)

(34613)

---

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19 — 02 — 1950
உதிர்வு: 09 — 01 — 1980

அமரர்
### தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா
[ஆசிரியர் - உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்]


எங்கள் நினைவில் நிலைத்திருக்கும் உங்கள் முகம் என்றென்றும் எங்கள் மனங்களில் பதிந்திருக்கும். உங்கள் நினைவே எங்கள் இதயங்களை நிறைத்திருக்கும்.

என்றும் உங்கள் நினைவுடன்:
தாய், மனைவி, மக்கள்,
சகோதரங்கள்.

நீராவியடி,
யாழ்ப்பாணம். [34605]

---

## நீங்காத நினைவுடன் 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 10 — 01 — 1929
விண்ணில்: 09 — 01 — 1993

அமரர்
### முருகுப்பிள்ளை அன்னம்மா

அம்மா! நீ மீண்டும் வரமாட்டாயா அம்மா? எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! அறிவின் சுடரொளியாய் ஒளி வீசி பண்பின் சிகரமாய்த் திகழ்ந்து பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்து ஆண்டு இரண்டாகியும் எம் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி பெற எங்கள் நெஞ்சாரப் பிரார்த்திக்கிறோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உம் ஆத்மா சாந்தியடைய அம்பாள் அருள் புரிவாள், நெஞ்சிருக்கும் வரை உம் நினைவிருக்கும்.

உம் நினைவில் வாழும்;
மகன்

தற்போதைய முகவரி
அம்மான் கோவிலடி,
சூராவத்தை,
சுன்னாகம்.

நிரந்தர முகவரி
அம்மான் கோவிலடி,
தையிட்டி,
காங்கேசன்துறை.

(7858)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அடைமொழியை நீக்க வேண்டும்!

அதிகாரப் பரவலாக்கம் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். உகந்த தீர்வைக் காண்பதற்காக, தேவைப்பட்டால் அரசமைப்பை மாற்றி அமைப்பதற்கும் நாம் தயாராக இருக்கிறோம்,

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட போர் இடைநிறுத்த உடன்பாடு குறித்த விவரங்களை உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு வெளியிடுவதற்காக சந்திரிகா வெள்ளிக்கிழமை மாலை மாநாடு ஒன்றை நடத்தினார்.

செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே, ஜனாதிபதி இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசமைப்பை மாற்றுவதற்கும் தயார் என்று தமது நிலைப்பாட்டை வெளியிட்டார்.

இனப்பிரச்சினைக்கு காணப்படும் எந்தத் தீர்வும் கொழும்பில் இப்போதுள்ள அதிகாரத்தை வடக்கு-கிழக்குக்கு மாற்றுவதாக இருக்க வேண்டும். அவ்வாறு அதிகாரப் பரவல் செய்யாத எந்தப் தீர்வாலும் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர இயலாது.

தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமை வழங்கக் கூடிய அதிகாரப் பரவல் குறித்தே அரசு சிந்திக்க வேண்டும். அதற்குக் குறைந்த எது குறித்தும் ஆராய்ந்து வேலை வினைக்கெடுவதில் பயனில்லை!

தமது தந்தையார், எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, தந்தை செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினை அடிப்படையாகக் கொண்டு அதிலிருந்து புதிய அதிகாரப் பரவல் வடிவம் ஒன்றை உருவாக்குவதே சந்திரிகாவின் சிந்தனையாக உள்ளது.

வெளிநாட்டில் கல்வி பயின்று இலங்கைக்கு வந்த கையோடு — 1920 களிலேயே — இந்த நாட்டுக்கு சமஷ்டி அரசு முறைதான் உகந்தது என்று கூறியவர் எஸ். டபிள்யு. ஆர். டி.

தாம் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தவேளை அதனை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று விரும்பியவர்.

இதனை சந்திரிகாவும் நன்கு அறிந்திருக்கிறார். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வை வகுக்கும் போது, சமஷ்டி ஆட்சிமுறை குறித்தும் அவர் சிந்தித்திருக்க வேண்டும். சில வேளை மனதுக்குள்ளே அது பற்றி நினைத்துக் கொண்டு வெளிக்காட்ட விரும்பாதிருக்கிறாரோ என்னவோ!

எதுவோ ...

தமிழ் மக்களின் அரசியல் இலக்கு தனித் தமிழீழம். ஆனால் அதற்கு மாற்றீடான ஒரு திட்டத்தை, சந்திரிகா முன்வைத்தால், அதனைப் பரிசீலிப்பதற்குத் தயார் என்று தலைவர் பிரபாகரன் அறிவித்திருக்கிறார்.

அந்த மாற்றுத் திட்டம், தமிழர்களுக்குத் தன்னாட்சி வழங்கும் சமஷ்டி அரசு முறையாக இருப்பதைத் தவிர வேறாக இருக்கமுடியாது. அதற்குக் குறைந்த எதனையும் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள்; ஏற்கவும் கூடாது.

எனவே சமஷ்டி அரசமைப்பு ஒன்று இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இன்றியமையாத ஒன்றாகவே இருக்கப்போகிறது, அதன் நிமித்தம், உகந்த விதத்தில் புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டே ஆகவேண்டும். தேவைப்பட்டால் மட்டும் மாற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. எனவே ''தேவைப்பட்டால்'' என்ற அடைமொழியை நீக்கிப் பேசவேண்டும் ஜனாதிபதி!

இலங்கையை ஒரே நாடாக வைத்திருப்பதற்கு சமஷ்டி அரசமைப்பு ஒன்றுதான் மார்க்கம். இம்முறை அதற்கு வழிகோலாவிட்டால், நாடு பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாது என்று சிங்களப் புத்திஜீவிகளில் பலரும் வெளிப்படையாகக் கூறியதை சந்திரிகா மறந்திருக்க முடியாது. அதுவே யாதார்த்தம் என்பதை அவர் உணர வேண்டும்.

# ரூ.2,000 கோடி செலவில் திருமலையில் 950 மெகா வாட்ஸ் மின் நிலையம்!

## அவசரமாக அமைக்க அரசு அனுமதி

கொழும்பு, ஜன. 9

சுமார் 2ஆயிரம் கோடி ரூபா செலவில் (40 கோடி அமெரிக்க டொலர் செலவில்) வெப்பசக்தி மின் உற்பத்தி (நிலக்கரி மூலம் மின் உற்பத்தி செய்யும்) ஆலை ஒன்றை திருகோணமலையில் உடனடியாக அமைக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு முடிவு செய்திருக்கின்றது.

கடந்த ஆறு வருட காலமாக இழுபறி நிலையில் இருந்த இந்தத் திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்த புதிய அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

950 மெகா வாட்ஸ் மின் சாரத்தை இந்த உற்பத்தி ஆலை மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருகோணமலையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடனேயே இத் திட்டத்தை முன்னைய அரசு தயாரித்திருந்தது. அதனை உடனடியாகச் செயற்படுத்துவது என புதிய அரசு திட்டவட்டமாக முடிவு செய்திருக்கிறது.

எனினும் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவது சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆலையினால் சுற்றுப்புறத்தில் உள்ள காடுகளும் கடலில் உள்ள மீன்படு பகுதிகளும் நச்சுத்தன்மைக்கு உள்ளாகும் பேராபத்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### கண்டனக் கூட்டத்தில் பேச்சு

# தமிழ் தேசியவாதத்தின் வளர்ச்சி கண்டு இந்திய அரசு அஞ்சுகிறது

## ஈழத்து அறிஞர் அவமதிக்கப்பட்டதற்கு காரணம் அதுவே

ஈழத்தில் தமிழ் தேசியவாதத்தின் வளர்ச்சி கண்டு இந்திய அரசு அடைந்த அச்சமும், மாநில அரசின் மறைமுகச் செயற்பாடுகளுமே எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கைத் தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்டதற்கும், அவமதிக்கப்பட்டதற்கும் காரணமாகும்.

இவ்வாறு தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கைத் தமிழ் அறிஞர்கள் அவமதிக்கப்பட்டது குறித்த கண்டனக் கூட்டத்தில் பேசிய எழுத்தாளர் எஸ். யேசுராசா பேசும் போது கூறினர்.

அகில இலங்கை கம்பன் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கூட்டம் இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கம்பன் கழகப் பணி மனையில் நடைபெற்றது.

மாநாட்டில் எமது அறிஞர்கள் அவமதிப்புக்கு ஆளானதை கூட்டாகபரந்த அளவில் சம்பந்தப்பட்டவர்களுக்கும்பிற நாட்டறிஞர்களுக்கும் நாடுகளுக்கும் நாம் கண்டனத்தை தெரிவிக்க வேண்டும் — என்றும் திரு. யேசுராசா மேலும் தெரிவித்தார்.

திரு. சிவராமலிங்கம் தமது தலைமை உரையில் பேசும் போது கூறியதாவது:

எமது மண்ணில் பிறந்த தனிநாயகம் அடிகளாரின் சிந்தனையில் உதித்ததே உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம். அந்தப் பெருமகனின் பெயர் கூட உச்சரிக்கப்படாத அளவிற்கு நன்றி மறக்கப்பட்டதும் அல்லாமல், நன்றி கெட்ட தனத்துக்குச் சிகரம் வைத்தது போல், எமது தமிழ் அறிஞர்கள் புறக்கணிக்கப்பட்டும் அவமதிக்கப்பட்டும் உள்ளனர். இது தொடர்பாக முரண்பட்ட தகவல்கள் வந்தாலும் கூட ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியது எமது பொறுப்பு — என்றார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண. பிரான்சிஸ் யோசெப் அடிகளார் பேசும்போது கூறியதாவது:

தமிழகத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகளில் தமிழ் ஆய்வுகளுக்குப் பதிலாக அரசியல் உட்புகுந்து விட்டது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கோட்பாட்டுடன் உருவாக்கப்பட்ட இந்த மன்றத்தில் அழைப்புக் கிடைத்தோ அல்லது அழைப்பின்றியோ அறிஞர்கள் கலந்துகொள்ளச் சென்றிருந்தாலும்கூட உலக அறிஞர்களால் போற்றப்படும் எமது தமிழ் அறிஞர்கள் கலந்துகொள்ள அனுமதித்திருத்தல் வேண்டும். தஞ்சையில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் புலிகள் புகவில்லை; அரசியல் புகுந்ததாலேயே இலங்கைத் தமிழ் அறிஞர்கள் வெளியேற்றப்பட்டனர். இதுதான் உண்மை. இது உலகத் தமிழ் அறிஞர்களையே அவமதிப்பதற்கு ஒப்பானது. தமிழ் நாட்டில் நன்றியுணர்வு மட்டுமல்ல, பண்பாடும்கூட கெட்டு விட்டது என்பதை இது வெளிக்காட்டுகிறது — என்று சொன்னார்.

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் பேசும்போது கூறியதாவது:-

உலகத் தமிழ்த் தலைமை இன்று எம்மை நோக்கிவந்து கொண்டிருக்கும்போது, தஞ்சாவூரில் நடந்துமுடிந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் எமது தமிழறிஞர்களை கலந்து கொள்ளவிடாது திருப்பி அனுப்பியது எம்மை மட்டுமன்றி எமது தேசியத்தையும் அவமதித்த ஒன்றாகும்.

எமது தமிழறிஞர்கள் அவமதிக்கப்பட்டதற்கான காரண காரியங்கள் எப்படி இருந்த போதிலும், இந்த நிகழ்வு சிலருக்கு ஏற்பட்டதல்ல; நம் எல்லோருக்குமே ஏற்பட்ட அவமானம். அதனால் சம்பந்தப்பட்ட உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் உட்பட வெளியிடங்களைச் சேர்ந்த அனைத்து அறிஞர்களுக்கும் எமது கண்டனங்களைத் தெரிவிக்கவேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்புமாகும்— என்றார்.

மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது திரும்பி வந்த கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை பேசும் போது கூறியதாவது;

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்வதற்கான எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது; வீசா மறுக்கப்பட்டது. இது தொடர்பாக மாநாட்டு அமைப்பாளர்களிடம் தொடர்பு கொண்ட போது அவர்கள் எமது பெயர்கள் மத்திய புலனாய்வுத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படும் என்றும் கூறினார்கள். தமிழாராய்ச்சி மாநாட்டில் இந்த வகையான அரசியல் தலையீடுகள் இருக்கும் போது அதற்குச் செல்வதற்கு மேற்கொண்டு முயற்சிப்பதில்லை என்று முடிவு செய்து விட்டு, யாழ்ப்பாணம் திரும்பினேன் —என்றார்.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை, யாழ். பிரதேசச் செயலர் க. குணராசா, திரு. க. சொக்கலிங்கம், திரு. குழந்தை சண்முகலிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

ஈழத் தமிழ் அறிஞர்கள் புறக்கணிக்கப்பட்டதை ஒட்டிய கண்டனத் தீர்மானத்தை அறிக்கை வடிவில் உலகின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த அறிஞர்களுக்கும் அரசுகளுக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக் குழுவுக்கும் அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அறிக்கை தயாரிக்கப்படும் இதற்கென திருவாளர்கள் சொக்கலிங்கம், குணராசா, யேசுராசா, காரை. சுந்தரம்பிள்ளை, அருட்திரு. பிரான்சிஸ் ஜோசெப் அடிகளார் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. (அ-111-4)

## மாவீரர் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 9

கடந்த 1985ஆம் ஆண்டு ஆவரங்காலில் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை படையினர் முற்றுகையிட்ட சமயம் முற்றுகையை உடைத்து வெளியேற முற்பட்ட வேளை இடம் பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் பண்டிதர் உட்பட 6 மாவீரர்களின் நினைவுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

கெற்பெலி பண்டிதர் குடியிருப்பில் இரவு 7 மணிக்கு தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. முகிலன் தலைமையில் நினைவுக் கூட்டம் நடைபெறும்.

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ் மாவட்டத்தில் உள்ள கடற்றொழில் சங்கங்கள், சமாசங்கள், ஒன்றியங்களைச் சேர்ந்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது அமுலுக்கு வந்துள்ள போர் இடைநிறுத்தத்தைத் தொடர்ந்து கடற்தொழிலில் மீனவர்கள்கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி மிக முக்கியமாக கலந்துரையாடப்படவிருப்பதால் சகலரையும் தவறாது சமுகமளிக்குமாறு கடற்புலிகளின் அரசியல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# புளொட் உறுப்பினர் வவுனியாவில் கொலை

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் புளொட் அமைப்பைச் சேர்ந்த சைமன் என்பவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் இரு கோஷ்டியினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலை தடுத்து நிறுத்தும் நோக்குடன் அந்தப் பகுதிக்கு சென்ற புளொட் அமைப்பினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலேயே புளொட் அமைப்பைச் சேர்ந்த சைமன் என்ற சிதம்பாப்பிள்ளை தில்லைநாதன் (25 வயது) கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமரசம் செய்யச்சென்ற புளொட் அமைப்பு உறுப்பினர்கள் சிலரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

### இடம் பெயர்ந்தோர்

# நிவாரணப்பொருள்களுடன் கோமாரி கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், ஜன. 9

கொழும்பில் தற்சமயம் பொருள்கள் ஏற்றிக் கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பல் எதிர்வரும் 12 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணப் பொருள்கள் இக் கப்பலில் எடுத்து வரப்படுவதாகவும் —

கப்பல் வந்து சேர்ந்தவுடன் பொருள்கள் இறக்கப்பட்டு ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் [illegible] கப்பல் புறப்பட்டதும் கொழும்பு துறைமுகத்துக்கு வெளியேதரித்துள்ள 'குமண' கப்பல் தனியார்களுக்கும் அரச திணைக்களங்களுக்குமான பொருள்களை ஏற்ற ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### இரு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொதுமக்களின் போக்குவரத்துக்காக பூநகரிப் பாதையும் திறக்கப்படும் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

இவ்விரு பாதைகளையும் [illegible] எனபதில் அரசுக்கும், படை[illegible] என்றும் தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின் குரல் வானொலியில்

**09 — 01 — 1995**

**திங்கள் இரவு**

- ★ 8-01 —இசையரங்கம்— பாட்டு; திரு. எம். சிறீரெங்கநாதன்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம்— வானோசை 4 இல் இரண்டாவது பரிசு பெற்ற நாக. தயாகரன் எழுதிய ''முகாரி''
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**10 — 01 — 1995**

**செவ்வாய் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி

**திங்கள் மாலை ஒலிபரப்பு**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 —எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — ஆழியமுதம்
- ★ 5-30 — மாணவர் பக்கம் — சங்கானை சிவப்பிரகாச ம. வி. மாணவர்கள்
- ★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
- ★ 6-02 — நேயர் நெஞ்சம் — கலந்து கொள்பவர் மன்னார் பரப்பாங்கண்டல் செல்வி ரூபி மார்க்கிரட் குசைநாதன்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 —என் தெரிவுகள்
- ★ 6-30 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

## பிரதம விருந்தினராக சிவாஜி

புதுடில்லி, ஜன. 9

பம்பாயில் நாளை ஆரம்பமாகும் 26 ஆவது சர்வதேச திரைப்பட விழாவின் தொடக்க நாள் நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக பிரபல தமிழக நடிகர் சிவாஜி கணேசனை அழைக்க இந்திய மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

அமைச்சின் அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள சிவாஜி இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திரைப்படவிழாவின் வர்த்தக ரீதியான பிரிவுக்கு ''மகளிர் மட்டும்'' ''கிழக்குச் சீமையிலே'' ஆகிய இரு படங்களும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பழமை மிக்க 35 சிலைகள் தமிழக பொலீஸ் மீட்பு!

### மூன்று பேர் கைதாகினர்

சென்னை, ஜன. 9

தமிழகத்தின் பல்வேறு ஆலயங்களிலிருந்து திருடப்பட்டதாகக் கருதப்படும் — மிகத் தொன்மை வாய்ந்த — பெரும் விலை மதிப்புள்ள — 35 சிற்பங்களை தமிழகத்தின் விசேட பொலீஸ் பிரிவு அண்மையில் மீட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

9ஆம் நூற்றாண்டுக்கும் 17ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த விலை மதிப்புமிக்க சிற்பங்களே மீட்கப்பட்டிருப்பதாகவும் —

சாளுக்கிய மற்றும் விஜய நகர காலத்தைச் சேர்ந்தவை எனக் கருதப்படும் இந்த சிற்பங்களை பல்வேறு ஆலயங்களில் இருந்து திருடி திரட்டியதாகக் கூறப்படும் மூவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் —

தமிழக பொலீஸ் டி. ஜி. நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (உ)

# ஐ. தே. க. கொள்கையையே பொ. ஐ. மு. பின்பற்றுகிறது

## ரணில் வெளியிடும் கருத்து

கொழும்பு, ஜன. 9

பழைய ஐ. தே. க. அரசாங்கத்தின் கொள்கைகளையே தற்போதைய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசும் தொடர்ந்து கடைப்பிடிக்க விரும்புகின்றது.

— இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் ஐ. தே. க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிகழ்த்திய அரசின் கொள்கை விளக்கப் பிரகடன உரை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

இந்தக் கொள்கை விளக்க உரையின் மூலம், பழைய ஐ. தே. க. அரசு கடைப்பிடித்த கொள்கைகளை புதிய அரசு அங்கீகரித்திருக்கின்றது என்றார் அவர். (உ)

### பாப்பரசர் விஜயத்தை ஒட்டி

# ஹோட்டல் கட்டணங்கள் திடீரென பல மடங்காகின!

கொழும்பு, ஜன. 9

பாப்பரசர் எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு வருவதை ஒட்டி —

கொழும்பில் உள்ள ஹோட்டல்கள், தமது அறை வாடகை மற்றும் ஹோட்டல் கட்டணங்களை பல மடங்கு அதிகரித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பாப்பரசரின் வருகையை ஒட்டி வெளிநாட்டு பயணிகள் பெரும் எண்ணிக்கையில் கொழும்பில் திரளுவார்கள் என எதிர்பார்த்தே ஹோட்டல்கள் கட்டணங்களை உயர்த்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

### வவுனியாவில் பணியாற்றிய

# தில்லைநடராஜா இனி கிளிநொச்சி அரச அதிபர்?

வவுனியா அரச அதிபராகப் பணியாற்றி வரும் எஸ். தில்லைநடராஜா கிளிநொச்சி அரச அதிபராக இடமாற்றம் செய்யப்படவுள்ளார் என்றும் —

வவுனியா அரச அதிபர் பதவிக்கு, தற்போது மன்னார் அரச அதிபராகப் பணிபுரிந்து வரும் திரு. கே. கணேஷ் இடம் மாற்றப்படுவார் என்றும் செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது. (உ)

# விடுதலையான பொலீஸார் நால்வருக்கும் பதவி உயர்வு

கொழும்பு, ஜன. 9

கடந்த நாலரை வருட காலமாக விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த பின்னர் கடந்த மூன்றாம் திகதி விடுவிக்கப்பட்ட நான்கு பொலீஸாருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நால்வருக்கும் சார்ஜன்ட்டாக பதவி உயர்வு வழங்கப்பட்டிருப்பதாகவும் —

தாம் விரும்பிய எந்தப் பொலீஸ் நிலையத்துக்கும் இடம் மாற்றம் பெற்றுச் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும்—

அவர்களுக்கு ஒரு மாதத்துக்கு சம்பளத்துடன் கூடிய லீவு வழங்கப்பட்டுள்ளதாகவும்

பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்தார். [உ]

# குளிக்க மறுத்த சிப்பாய் கோப்றலைச் சுட்டார்!

## நிலாவெளி முகாமில் சம்பவம்

நிலாவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ கோப்றல் ஒருவர் மற்றொரு இராணுவ சிப்பாயினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குமார ஜயவீர என்பவரே இறந்த கோப்றல் ஆவார்.

சம்பவதினம் காலை 5-25 மணி இருக்கும் என்றும் —

இறந்த கோப்றல் குமார ஜயவீர, குளிப்பதற்காக இராணுவத்தினரை எழுப்பினார் என்றும் —

அட்போது சந்தேக நபரும் எழும்பி, குளிப்பதற்கு மறுத்து கோப்றலுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார் என்றும் —

பின்னர் அவர் அங்கு சாத்தி வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை எடுத்து கோப்றல் குமார ஜயவீராவை நோக்கிப் பல தடவை சுட்டார் என்றும் —

திருகோணமலை பதில் நீதிவான் மு. கே செல்வராசா முன்னிலையில் நடத்தப்பட்ட மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. (இ)

### வடக்கு—...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது அமுலில் உள்ள போர் இடை நிறுத்தம் இம் மாதம் 22 ஆம் திகதிவரை அமுலில் இருக்கும்.

எனினும் அரசு அதனை நீடிக்க விரும்புவதாக —ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

## வைகுண்ட ஏகாதசி விழா

சுவாக்க வாயில் வைகுண்ட ஏகாதசி விழாவை முன்விட்டு பஜனை, எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை அரியாலை பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா சேவா நிறுவன பிரசாந்தி நிலைய மண்டபத்தில் இரவு 8-00மணி தொடக்கம் அதிகாலை 5-00 மணி வரையும் நடைபெறும்.

**உற்பத்தியைப் பெருக்குவோம்**
**ஊக்கமாய் உழைத்திடுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்துரை அன்னலட்சுமி
[அன்னம்]

சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த திருமதி சின்னத்துரை அன்னலட்சுமி [அன்னம்](8.1.95) நேற்று காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 9-1-95 நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி. (34618)

## திருமதி ஏரம்பு சிவபாக்கியம்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏரம்பு சிவபாக்கியம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணபிள்ளை ஏரம்புவின் அன்பு மனைவியும், ஏகாம்பிகை நடராசா, காலஞ் சென்ற இரத்தினலிங்கம் (ஆசிரியர்), மற்றும் பேராயிரம் (இளைப்பாறிய மாநகரசபை பிரதமலிகிதர்), Dr. சரவணபவான் (கொழும்பு), நடனசண்முகம் (பிரதேசசபை, புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நடராசா (ஆசிரியர்), கமலாதேவி (ஆசிரியர்), இராசலட்சுமி (ஆசிரியர்), சறோஜினிதேவி, கமலாதேவி (ஆசிரியர் பெரியபுலம் ம.வி.) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9-1-95) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏ. பேராயிரம்
ஏ. நடனசண்முகம்

15/1, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (34611)

## தம்பு குமாரசாமி

சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த தம்பு குமாரசாமி நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் தவரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் ஆச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற இராசர் மற்றும் துரைசிங்கம், இராமநாதன் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற தவராஜலிங்கம் (ஆசிரியர்) மற்றும் ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), சிவனேஸ்வரன், ஜெகதீஸ்வரி, விக்கினேஸ்வரி, சிவனேஸ்வரி (சுவிஸ்), சத்தியேஸ்வரி (பல் வைத்தியர்— சிங்கப்பூர்), விமலேஸ்வரன் (சுவிஸ்), விக்கினேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்மலர் (ஆசிரியர், இடைக்காடு மகா வித்தியாலயம்), ரேவதி, இன்பேஸ்வரி, கந்தசாமி (கடை உரிமையாளர், சிறுப்பிட்டி), செல்வநாயகம், சிவநாமன் (சுவிஸ்), மணன் (பொறியியலாளர் – சிங்கப்பூர்), தவக்குமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நரேந், ஜனார்த்தனன், சுதர்சன், சுமணன், சுகிர்தன், சயந்தி, காயத்திரி, சும்சாயினி, சுதாகரன், ருஷாந்தினி, மதனாகரன், ஐங்கரன், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஊரெழு கிழக்கில் உள்ள வசந்தி வீதியில் அமைந்துள்ள மருமகனாகிய செல்வநாயகத்தின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. செல்வநாயகம்
(மருமகன்)
வசந்தி
(மகள்)

(34615)

## N. R. வீரவாகு

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த N. R. வீரவாகு காலமாகிவிட்டார்.

அன்னார் நாகலட்சுமியின் அன்புக் கணவரும், இதயராணி, இந்திராதேவி (லண்டன்), இந்திரகுமாரி, ஜெகதீஸ்வரி (கனடா), ஜெயகௌரி (பிரான்ஸ்), குமுதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகாந்தன் (திருமகள் ஸ்ரோஸ், சிவலிங்கப்புளியடி), கிரிநாதன் (லண்டன்), சிவதாசன், ஸ்ரீரஞ்சன் (கனடா), செல்வகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரூபகாந்தன், ஜெகனியா, சோபியா, சிந்துஜா, உசங்கிரி, நிசாளினி, கிரிசாந், அஜந்தினி, ஸ்ரீகஜன், ஸ்ரீஜெர்மிலா, ஸ்ரீமாதுளா, ஜக்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (09—01—1995) பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
நா ஸ்ரீகாந்தன்
மருமகன்

''கேணியடி''
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (34616)

## சபாரத்தினம் நந்தகுமாரன்

கந்தர்மடத்தைச் சேர்ந்த சபாரத்தினம் நந்தகுமாரன் 5-1-95 இல் கனடாவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சபாரத்தினம் – ஞானாம்பிகை தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம் – சிவபாக்கியத்தின் மருமகனும், Dr செந்திற்செல்வி அவர்களின் அன்புக் கணவரும், சிவரம்யா, ஆர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்குமாரன் (சிங்கப்பூர்), இரத்தினகுமாரன் (கனடா), ஞானகுமாரன் (கனடா), சிறிகுமாரன் [லண்டன்] ஆகியோரின் மூத்த சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

தகவல்:
வை, சி. சி. கு. சிவகுருநாதன்
(குணம் – மாமன்)

50 A, பலாலி வீதி,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம். (34 6 14)

உ
சிவமயம்

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் மார்கழி மாதம் 27ஆம் திகதி (11 - 01 - 95) புதன்கிழமை பிற்பகல் 4-33 மணி தொடக்கம் 8-02 மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**விஜயக்குமார்**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறைசெல்வி
**பௌசிகா**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு திருமணம் இளங்கலைஞர் மண்டபத்தில் [சட்டநாதர் வீதி] நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி தியாகராஜா
245, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி பஞ்சாட்சரம்
[லொறி உரிமையாளர் கடுக்கன்]
489, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(34606)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா திருஞானசம்பந்தன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திருநெல்வேலி மணற்தரை வீதியை வதிவிடமாக கொண்டவரும், முன்னாள் திருநெல்வேலி சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியருமாகிய க. திருஞானசம்பந்தன் லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரிமளாதேவியின் அன்புக் கணவரும், திரிவேணி (U.K.), கௌரிசங்கர் (U.K.), கேதாரிநாத் (U.K.), பகிரதி (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜேந்திரன் (U.K.), சந்தியா (U.K.), குலேந்திரன் (U.K.) ஆகியோரின் மாமனாரும், திருமதி கு. சத்தியபாமா (U.K.), காலஞ்சென்ற திருமதி சோ. தெய்வசிகாமணி, திரு. செ. இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
திருமதி சோ. கமலாம்பிகை
[மருமகள்]

49, Cliff View Road,
Lewisham Se 13, 7Db,
London.
U. K.

108, சிவன்கோயில் வீதி,
திருநெல்வேலி.

(34607)

## செல்லத்துரை சண்முகநாதன்

சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லத்துரை – அமராவதி தம்பதிகளின் மகன் சண்முகநாதன் (P. H. I.) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலலட்சுமியின் கணவரும், சுரேன், கஜேன் (கணக்காளர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜனியின் அன்பு மாமனாருமாவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் கொழும்பு இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (8-1-95) நடைபெற்றன என்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி எம். கே. சுப்பிரமணியம்

நீதி நிலையம்,
சித்தன்கேணி (34610)

## திருமதி தம்பிஐயா வள்ளியம்மை

இல. 136/4, நாவலர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிஐயாவின் மனைவி வள்ளியம்மை நேற்று நண்பகல் சிவபதமடைந்தார்.

அன்னார் திருமதி சின்னத்தம்பி பரமேஸ்வரி, திருமதி நவரட்ணம் மங்கையர்க்கரசி, திருமதி திசவீரசிங்கம் மீனாம்பாள், திருமதி சிவஞானசுந்தரம் தையல்நாயகி, கிருஷ்ணமூர்த்தி (அவுஸ்திரேலியா), கருணாமூர்த்தி (கல்யாணி கிறீம் ஹவுஸ்), விஜயபாலன் (சாம்பவி றேட் சென்டர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர்), நவரத்தினம் (இளைப்பாறிய R. D. O வும், பிரபல சோதிடரும், அவுஸ்திரேலியா), திசவீரசிங்கம் (இளைப்பாறிய ஆண் பரிசாரகர்-அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி), சிவஞானசுந்தரம் (முன்னாள் உப – அதிபர் நாவலர் மகா வித்தியாலயம்), திருமதி கிருஷ்ணமூர்த்தி சிவாநந்தினி (அவுஸ்திரேலியா), திருமதி கருணாமூர்த்தி சுபத்திராதேவி, திருமதி விஜயபாலன் யோகேஸ்வரி (தட்டெழுத்தாளர் – யாழ் தபால் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சருணைநாயகி, காலஞ்சென்ற கலாநாயகி, மற்றும் மனோரஞ்சினி, தயாரஞ்சினி, சிவகுமார், சிவசக்தி, ஐங்கரன், பாலசுப்பிரமணியம், திருமாவளவன், சிவகாமினி, இளங்கோ, கீதா, நடராஜமூர்த்தி, சூரியநாராயணன், இராஜராஜேஸ்வரி, உதயகுமாரன், நிசாநாயகி, சந்திரகுமார், சந்திரகுமாரி, சிவாஜினி, திருலோஜன், திருலோஜினி, சயந்தன், ஆதீபன், கல்யாணி, வாகினி, ஜனகன், குகன், சாம்பவி, ஹம்சானந்தி, சாரங்கன், ராகசொரூபி, பிரீத்கா, தர்சிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல. 136/4, நாவலர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று 9 - 1 - 95 பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. கருணாமூர்த்தி
(மகன்)

(34612)

# பத்தாயிரம் ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

கொழும்பு, ஜன, 9

கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியப்பற்றாக் குறையை முற்றாகத் தீர்க்கும் பொருட்டு சுமார் 10,000 ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்தார்.

இதன்படி தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக 6,000 ஆசிரியர்களும் மேலதிகமாக உருவாக்கப்படும் வெற்றிடங்களுக்கு 4,000 பேருமாக, 10,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இவர்களில் 2,500 பேர் ஆங்கில மொழி கற்பிக்க நியமிக்கப்படுவார்கள் எனவும் அமைச்சர் கூறினார்.

## சண்முகதாஸ் யாழ். திரும்பினார்

தஞ்சாவூரில் நடந்த 8ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்த சமயம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், அவரது துணைவியார் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். (இ -3)

## வடபகுதி அரச...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் பாதுகாப்பு இணைப்புக் குழுவின் விசேட அமைப்பிலான ''றபர் ஸ்ராம்ப்''பை இனிப்பாவிக்குமாறு அரச அதிபர்களை பாதுகாப்பு இணைப்புக்குழு கேட்டுள்ளது. (இ-3)

# பிறந்த நாள் வாழ்த்து

தெல்லிப்பளை
துர்க்கை அம்மன் தேவஸ்தான
பரிபாலன சபைத் தலைவரும், சமாதான நீதிபதியுமாகிய
சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**
**07 - 01 - 1995** இல் தனது 70 ஆவது பிறந்த நாளை தரிசித்துள்ளார்

ஈழத்தில் தமிழையும் சைவத்தையும் தம் உயிராகப் பேணி வளர்த்த பெரியார் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தெய்வீக சிந்தனையை தம் அரிய அறப் பணிகளாலும் அரியபோதனைகளாலும் சைவமக்களிடம் வளர்த்தார் அன்னை அவர்கள். மேலும் இவர் பல்லாண்டு காலம் அன்னையருள் பெற்று நலமோடு வாழ்ந்து தெய்வீக சமூகப் பணிகள் ஆற்றி வாழ வேண்டும் என அன்புடன் வாழ்த்தி மகிழ்கிறோம்.

பரிபாலன சபை,
வட கோவை ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயில்,
கோப்பாய்.

(34609)

# அஞ்சலியும் இரங்கலுரையும்

## சம்பந்தன் (திருநெல்வேலி)

தமிழீழத்தின் சிறுகதை மூலவர் மூவருள் ஒருவரும், சாகுந்தல காவிய நூலாசிரியரும், பண்டிதமணி நினைவுக் காப்புநிதியம் நிறுவ நிதி உபகரித்தவரும், முதுபெரும் எழுத்தாளரும், எழுத்துலகில் 'சம்பந்தன்' என அழைக்கப்பட்டவருமான யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்த கந்தையா திருஞானசம்பந்தன் அவர்கள் லண்டனில் காலம் ஆனார் என்ற செய்தியை மன வேதனையுடன் அறியத் தருகிறோம்.

திருநெல்வேலி கிழக்கு, இராஜ வீதியிலுள்ள எமதில்லத்தில் இன்று (09—01—1995) திங்கட்கிழமை துக்கமனுஷ்டித்து, பிற்பகல் 4 மணிக்கு அஞ்சலியும் இரங்கலுரையும் இடம்பெறும்.

தகவல்:
சு. இராஜநாயகன்

(34608)

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காம் திருமதி பரமேஸ்வரியம்மா மீனாட்சிசுந்தரேஸ்வரக் குருக்கள் சிவபதம் எய்திய செய்தி கேட்டு ஓடோடி வந்து எங்கள் ஆறாத்துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள் உரியதாகும்.

மேலும் அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்தபோது சிகிச்சை அளித்த வைத்தியர்களுக்கும், ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் நன்றிகள் உரியதாகும்.

இறுதிச் சடங்குகளில் பங்கேற்றும், அன்னாரது ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் அனைவருக்கும் என்றென்றும் எமது நன்றிக்கடன் உரியதாகும்.

இவ்வண்ணம்;
கணவர், மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர் மற்றும் உறவினர்கள்.

138, கிராம விஸ்தரிப்புத் திட்டம்,
திருநெல்வேலி. (சி/130)

## எழுத்தாளர் சம்பந்தன் காலமானார்

ஈழத்தின் மிக மூத்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரான ''சம்பந்தன்'' எனப்படும் க. திருஞானசம்பந்தன் நேற்று முன் தினம் சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

ஈழத்துச் சிறுகதை மூலவர் மூவரில் ஒருவரான சம்பந்தன் சாகுந்தல காவிய நூலாசிரியரும் இலங்கை, இந்திய வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற சிறுகதைகள் பலவற்றின் ஆசிரியருமாவார். பண்டிதமணி நினைவுக்காப்பு நிதியத்தைநிறுவுவதற்கு நிதி உதவி அளித்திருந்தார்.

அமரர் சம்பந்தனது சிறுகதைகள் தமிழ்நாட்டில் கதைக்கோவையிலும் கடந்த ஆண்டு இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைப் பூங்கொத்துத் தொகுதியிலும் இடம் பெற்றன. இவரது சாகுந்தல காவிய நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசிலும், யாழ்.இலக்கிய வட்டப் பரிசிலும் கிடைத்தன.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சார்ந்த அவரது மறைவு குறித்து அவரது மாணாக்கர் சு.இராசநாயகம் அவர்களின் திருநெல்வேலி கிழக்கு இராஜவீதியிலுள்ள இல்லத்தில் இன்று 9 ஆம் திகதி திங்கட்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு அஞ்சலியும், இரங்கலுரைகளும் இடம்பெறும் என அறிவிக்கப்படுகிறது.

## பெண்கள்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் — அந்த எம். பி. மேலும் கூறினார்.

இந்த அடையாள அணிவகுப்பின் பின்னர் அங்கு நின்ற படையினருக்கு பிரிகேடியரால் அறிவுறுத்தல் வகுப்பு ஒன்றும் நடத்தப்பட்டது.

இதற்கிடையில் பூமான் சோலை காயான்காடு பகுதிகளில் சம்பவதினம் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த படைப்பிரிவு வேறு பகுதி ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கண்காணிப்பு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலக வசதிகளைச் செய்து கொடுக்குமாறும் யாழ். செயலகம் கேட்கப்பட்டுள்ளது.

இன்று வரும் குழுவினருக்கான போக்குவரத்து வசதிகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவினர் மேற்கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவினர் யாழ். சுபாஸ் ஹோட்டலில் இருந்து போர் இடை நிறுத்தத்தைக் கண்காணிப்பர் எனத் தெரிய வருகிறது.

போர் இடை நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கான நோர்வே, நெதர்லாந்து, கனடா நாட்டுப் பிரதிநிதிகள் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இதற்கிடையில் இராணுவ பிரதிநிதிகளுக்கும், புலிகளின் ராணுவ பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு ஒத்திப்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. முன்னைய போர் நிறுத்தங்கள் குலைந்து போனதுபோல இம்முறை குலையும் வாய்ப்பு குறைவே என கணிக்கப்படுகிறது.

தற்போதைய போர் இடைநிறுத்தத்தை வெளிநாட்டு பிரதிநிதிகள் கண்காணிப்பதால் யார் தவறு செய்கிறார்கள் என்பது உடனடியாக வெளியாகிவிடும் என்பதால் எந்த தரப்பும் போர் இடைநிறுத்த மீறலில் இறங்காது என்று செய்தியாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

இப்பத்திரிகை நிய உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட் [illegible] 09—01—1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org